**<u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

வா.சா.2 – செல்வராசு OS.No.10/2022 நாள் : 25.06.2024

**<u>சாட்சி 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

என்னை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க சாந்தி தான் அழைத்து வந்தார். பத்திரத்தில் 2 பேர் சாட்சி கையெழுத்து போட வேண்டும் என்பதற்காக நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். சுசீலாவுக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியும். வாதி சாந்தியை தவிர 1 முதல் 5 பிரதிவாதிகள் அப்பொழுது கூட்டுக் குடும்பமாகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணம் கடனுக்காகத்தான் எழுதி வைக்கப்பட்டது என்றாலும் நான் சொல்வதுபோல் அன்பினாலும், பாசத்தினாலும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்பு குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்யும்பொழுது வாதி செட்டில்மெண்ட் சொத்தை தன்னுடைய பாகத்திற்கு ஒதுக்குமாறு வாய்மொழியாக கேட்டப்படி அவருக்கு அந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சுசீலாவால் அந்த சொத்து அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரத்தை அவரைக் கேட்டால் தெரியும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் வாதி தாக்கல் செய்த இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

**(ஒம்) – திரு.M.கிறிஸ்டோபர்,**
**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரியலூர்.**